“வான் தந்த மழை நீரை காப்போம் – வாழ்வுக்கு வளம் சேர்ப்போம்”
“பிளாஸ்டிக் பொருட்களை தவிர்ப்போம் – மண் வளம் காப்போம் ”

# சாத்தூர் நகராட்சி

## 2022–2023 நிர்வாக அறிக்கை

### அமைப்பும் மேலாட்சியும்

ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் அரசு ஆணை எண்.56ன்படி சாத்தூர் பேரூராட்சியாக இருந்த இந்த உள்ளாட்சி அமைப்பு 17–01–1970 முதல் மூன்றாம் நிலை நகராட்சியாக மாற்றி அமைக்கப்பட்டு பின்பு 09–05–1983 முதல் அரசு ஆணை எண்.651 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள்.09–05–1983ன்படி இரண்டாம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் பரப்பளவு 3.83 சதுர கி.மீ. ஆகும்.

இந்நகராட்சியில் 24 வார்டுகள் உள்ளது. அரசு தனது 05.12.2019–ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசு ஆணை எண்.452ல் 24 வார்டுகளாக வார்டு பிரிவினை செய்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. தமிழக அரசிதழ் (Part II Section 2)–ல் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பெண்களுக்கென வார்டு எண். 18, தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான பொது வார்டு எண்.16, பழங்குடியினர் பெண்களுக்கான வார்டு எண்.11, பெண்களுக்கென பொது வார்டு எண்கள்.3,4,5,7,8,10,12,14,17,22 மற்றும் 24 ஆகிய வார்டுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு சாத்தூர் நகராட்சியின் நகர்மன்ற தலைவர் தேர்தலுக்கு பொது வார்டுகளாக ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கேற்ப 04.03.2022–ம் தேதியில் நகராட்சியில் நகர்மன்றத் தலைவர் தேர்தல் நடைபெற்றது.

### மக்கள் தொகை

2011–ஆம் ஆண்டில் இந்நகரில் மேற்கொள்ளப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 29390 ஆகும். இதில் ஆண்கள் 14395–ம் பெண்கள் 14995–ம் அடங்குவர்.

### மன்றம்

சாத்தூர் நகராட்சியில் 24 வார்டுகளுக்கான நகர்மன்ற உறுப்பினர்களை தேர்வு செய்ய 19.02.2022ல் நடைபெற்ற சாதாரணத் தேர்தலில் 24 மன்ற உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்கப்பட்டு 02.03.2022ம் நாளன்று பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டுள்ளார்கள். **திரு.ச.குருசாமி அவர்கள் நகர்மன்றத் தலைவராகவும், திரு.பா.அசோக் அவர்கள் நகர்மன்றத் துணைத் தலைவராகவும்** இருந்து வருகிறார்கள். இந்நகர்மன்றம் ஒவ்வொரு மாதமும் கூடி தீர்மானங்களை இயற்றி செயல்பட்டு வருகிறது. தேவைக்கேற்ப அவசரக் கூட்டங்களும் நடைபெற்றுள்ளது. நகர்மன்ற உறுப்பினர்கள் விவரம் பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண் | தலைவர் மற்றும் துணைத்தலைவர் பெயர் மற்றும் முகவரி | வார்டு எண். |
|---|---|---|
| 1 | **திரு குருசாமி ச**<br>**நகர்மன்றத் தலைவர்,**<br>**த/பெ.சடையாண்டித் தேவர்**<br>**526, பெரியார் நகர், தென்வடல் புதுத்தெரு, சாத்தூர்.** | 14 |
| 2 | **திரு அசோக் பா**<br>**நகர்மன்ற துணைத்தலைவர்,**<br>**த/பெ.பால்ராஜன் வ**<br>**32, நேருஜி முதல் தெரு, நேருஜி தெரு, பாரதியார் தெரு, சாத்தூர்.** | 17 |

| வ.எண் | உறுப்பினர்கள் பெயர் மற்றும் முகவரி | வார்டு எண். |
|---|---|---|
| 1 | திருமதி சுப்புலட்சுமி ப<br>க/பெ. பஜனை கிருஷ்ணன்<br>560, பெரியார் நகர், சாத்தூர். | 1 |
| 2 | திருமதி செண்பகவள்ளி வெ<br>க/பெ. வெற்றிச்செல்வன் கே பி என்<br>34, அண்ணா நகர், குருலிங்காபுரம் வடக்கு, சாத்தூர். | 2 |
| 3 | திரு கார்த்திக்குமார் ப<br>த/பெ.பழனிச்சாமி<br>820ஜி, காந்தி நகர், சேவு கடை சந்து, சூட கம்பெனி சந்து, சாத்தூர். | 3 |
| 4 | திரு கணேஷ்குமார் பா ஆ பா செ<br>த/பெ.செண்பகராஜன் பா ஆ பா<br>50, பாரதியார் தெரு, LIC நியூ காலனி, சுமங்கலி மண்டபம் தெரு, சாத்தூர். | 4 |
| 5 | திரு பிரகாஷ் ஆ<br>த/பெ.ஆண்டியப்பன்<br>95, நந்தவனப்பட்டி தெற்கு தெரு, நந்தவனப்பட்டி தெருக்கள், சாத்தூர். | 5 |
| 6 | திருமதி செல்வி மா<br>க/பெ.மாடசாமி<br>1, காமராஜபுரம் குறுக்குத் தெரு, காமராஜபுரம், சாத்தூர். | 6 |
| 7 | திருமதி ஜெயலட்சுமி பூ<br>க/பெ.பூமாரிமுத்து<br>183/1, ஆண்டாள்புரம், நடராஜா தியேட்டர் ரோடு, மணிகண்டன் லேத் தெரு, சாத்தூர். | 7 |
| 8 | திரு பொன்ராஜ் க<br>த/பெ.கதிரேசன் சி<br>354, மேலகாந்தி நகர், SVN தெரு, சாத்தூர். | 8 |
| 9 | திருமதி பஞ்சவர்ணம் இ<br>க/பெ.இசக்கிமுத்து<br>146, குருலிங்காபுரம், குருலிங்காபுரம் தெற்கு, சாத்தூர். | 9 |

| | | |
|---|---|---|
| 10 | திரு மாரிக்கண்ணு ச<br>த/பெ.சண்முகவேல்<br>104, முருகன் கோவில் வடக்கு தெரு,<br>மேலக்காந்தி நகர் மேற்கு, சாத்தூர். | 10 |
| 11 | திருமதி தெய்வானை ச<br>க/பெ.சங்கர் எம்<br>183, மேலகாந்தி நகர், காட்டு நாயக்கன் தெரு,<br>பண்காரர் தெரு, சாத்தூர். | 11 |
| 12 | திரு பூமாரிமுத்து க<br>த/பெ.கந்தசாமி<br>183/1, ஆண்டாள்புரம், சாத்தூர். | 12 |
| 13 | திருமதி ஜமுனா சு<br>க/பெ.சுரேஷ் ரா<br>7, காட்டு புதுத்தெரு, காட்டுத் தெரு, சாத்தூர். | 13 |
| 14 | திருமதி கற்பகம் மு<br>க/பெ.முருகன் கே எஸ்<br>30/113, காமாட்சியார் தெரு, வெள்ளையப்பர் தெரு,<br>V.O.C. தெரு, படந்தால் ரோடு, சாத்தூர். | 15 |
| 15 | திருமதி ஹேமலதா அ<br>க/பெ.அன்பழகன்<br>12, ஆர்.சி. வடக்கு தெரு, ஆர்.சி. தெருக்கள், சாத்தூர். | 16 |
| 16 | திருமதி மரியசிரஞ்சீவி ஞா<br>க/பெ.ஞானசேகரன் மு<br>81, நென்மேனி ரோடு, வாழவந்தாள்புரம் ரோடு, சாத்தூர். | 18 |
| 17 | திருமதி சுபிதா க<br>க/பெ.கண்ணன்<br>7/11, பெருமாள் கோவில் வடக்கு மாட வீதி,<br>செக்கடி தெரு, வடக்கு ரத வீதி, சாத்தூர். | 19 |
| 18 | திருமதி சுப்புலட்சுமி இ<br>க/பெ.இசக்கிமுத்து<br>38, சுந்தரானந்த பஜனை மட கிழக்கு தெரு,<br>மாரியம்மன் கோவில் தெரு, பால்பண்ணை தெரு,<br>சாத்தூர். | 20 |
| 19 | திருமதி பேச்சியம்மாள் என்ற செல்வகுரு சு<br>க/பெ.சுரேஷ்குமார்<br>7பி, பிள்ளையார் கோவில் தெரு,<br>முருகன் கோவில் தெரு, சாத்தூர். | 21 |
| 20 | திரு முருகன் ரா<br>த/பெ.ராஜகோபால் கோ<br>57M, வெள்ளக்கரை ரோடு 5வது சந்து, G.R. இறக்கம், சாத்தூர். | 22 |
| 21 | திருமதி ஏஞ்சல் சு<br>க/பெ.சுந்தர மகாலிங்கம்<br>17/59, கீழக்காந்தி நகர், பங்களா தெரு, முஸ்லிம் தெரு,<br>L.F. கிணற்று தெரு, சாத்தூர். | 23 |
| 22 | திரு சங்கர் ரா<br>த/பெ.ராஜசேகரன்<br>47, பெருமாள் கோவில் தெற்கு மாட வீதி,<br>L.F. ஆபிஸ் தெரு, தெற்கு ரத வீதி, சாத்தூர். | 24 |

**குழுக்கள் :**

தேர்வு செய்யப்பட்ட தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்களிடையே தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு கீழ்க்காணும் விபரப்படி மூன்று குழுக்கள் அமைக்கப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

1. **வரி மேல்முறையீட்டுக் குழு :**

வரி மேல்முறையீட்டுக்குழு உறுப்பினராக திரு.PAPS.கணேஷ்குமார் அவர்கள் தொடர்ந்து செயல்பட்டு வருகிறார்கள்.

2. **ஒப்பந்தக் குழு:**

ஒப்பந்தக்குழு உறுப்பினர் திருமதி.ஜி.மரியசிரஞ்சீவி அவர்கள் ஒப்பந்தக்குழு உறுப்பினராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு வருகிறார்.

3. **நியமனக் குழு:**

திரு.A.பிரகாஷ் அவர்கள் நியமனக்குழு உறுப்பினராக தொடர்ந்து செயல்பட்டு வருகிறார்.

**கூட்டம்**

இவ்வறிக்கை ஆண்டில் நகர்மன்றத் தலைவர் அவர்களால் 8 சாதாரணக்கூட்டம் மற்றும் 5 அவசரக்கூட்டமும் கூட்டப்பட்டு. அதில் மொத்தம் 229 பொருட்கள் முன்வைக்கப்பட்டு இறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த அறிக்கை ஆண்டில் 8 சாதாரணக்கூட்டங்களில் 161 கூட்டப்பொருட்களும், 5 அவசரக் கூட்டங்களில் 68 கூட்டப்பொருட்களும் கூட்டப்பட்டு அனைத்தும் இறுதி செய்யப்பட்டுள்ளது.

**இருப்பிடம்**

நகராட்சி அலுவலகம் புதிய கட்டிடத்தில் 10.05.1989 முதல் இயங்கி வருகிறது. புதிய கட்டிடத்தில் அனைத்து பிரிவுகளும் பொது பிரிவு, பொறியாளர் பிரிவு, நகரமைப்புப் பிரிவு, வருவாய் பிரிவு, சுகாதாரப் பிரிவு மற்றும் நகர்மன்றக் கூடம் முதலியன ஆங்காங்கே தனித்தனியாக இயங்கி வருகிறது.

நகராட்சி அலுவலக வளாகத்தில் புதிதாக வருவாய் நிதியில் இருந்து கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் கணினி மூலம் வரிவசூல் மையம் அமைக்கப்பட்டு 01–08–2003 முதல் கணினி மூலமாக சொத்துவரி, தண்ணீர் கட்டணம், தொழில் வரி மற்றும் வரியில்லா இனங்களும் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

**ஆணையாளர்கள்**

அறிக்கை ஆண்டில் கீழ்காணும் அலுவலர் நகராட்சி ஆணையாளராகப் பணிபுரிந்துள்ளார்.

| | | |
|---|---|---|
| 1 | திரு.எம்.இளவரசன்,<br>நகராட்சி ஆணையாளர். | 10.06.2022 மு.ப. |

நிர்வாகம்:

அரசாணை (நிலை) எண்.10, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை, நாள்: 23.01.2023–ன்படி இந்நகராட்சியில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்கள்

| நகராட்சிகளின் நிலைகளுக்கேற்ப ஒரே சீரான பணியிடங்கள் தோற்றுவித்து முறைப்படுத்துவதற்கான வரையறைகள் (Norms) நிர்ணயம் செய்தல் | | | | | |
|---|---|---|---|---|---|
| இரண்டாம் நிலை நகராட்சிகள் | | | | | |
| வ. எண் | | பதவியின் பெயர் | பணியிடங்களின் எண்ணிக்கை | ஊதிய நிலை | ஊதிய விகிதம் |
| 1 | பொதுப்பிரிவு | மேலாளர் (வகுப்பு–IV) (Manager Class-IV) | 1 | நிலை – 11 | 35,400 – 1,30,400 |
| 2 | | கணக்கர் (வகுப்பு–V) (Accountant Class-V) | 1 | நிலை – 10 | 26,600 – 75,900 |
| 3 | | வருவாய் ஆய்வாளர் (வகுப்பு–V) (Revenue Inspector Class-V) | 1 | நிலை – 10 | 26,600 – 75,900 |
| 4 | | உதவியாளர் (Assistant) | 1 | நிலை – 10 | 26,600 – 75,900 |
| 5 | | இளநிலை உதவியாளர் (Junior Assistant) | 5 | நிலை – 8 | 19,500 – 71,900 |
| | | தட்டச்சர் (Typist) | 1 | நிலை – 8 | 19,500 – 71,900 |
| 7 | | வருவாய் உதவியாளர் (Revenue Assistant) | 3 | நிலை – 8 | 19,500 – 71,900 |
| 8 | | பதிவறை எழுத்தர் (Record Clerk) | 1 | நிலை – 2 | 15,900 – 58,500 |
| 9 | | அலுவலக உதவியாளர் (Office Assistant) | 3 | நிலை – 1 | 15,700 – 58,100 |
| 1 | பொறியியல் பிரிவு | நகராட்சி பொறியாளர் நிலை III – உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் (Municipal Engineer Grade-III – Assistant Engineer / Junior Engineer) | 1 | நிலை – 20 | 37,700 – 1,38,500 |
| 2 | | பொதுப்பணி மேற்பார்வையாளர் (Public Works Overseer) | 1 | நிலை – 11 | 35,400 – 1,30,400 |
| 3 | | படவரைவாளர் நிலை – III (Draughtsman Grade – III) | 1 | நிலை – 11 | 35,400 – 1,30,400 |
| 4 | | பணி ஆய்வாளர் (Work Inspector) | 2 | நிலை – 5 | 18,200 – 67,100 |
| 5 | | மின்பணியாளர் நிலை – II (Electrician Grade – II) | 1 | நிலை – 8 | 19,500 – 71,900 |
| 6 | | குழாய் பொருத்துநர் நிலை – II (Fitter Grade – II) | 1 | நிலை – 8 | 19,500 – 71,900 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | நகரமைப்பு பிரிவு | நகரமைப்பு ஆய்வாளர் (Town Planning Inspector) | 1 | நிலை – 11 | 35,400 – 1,30,400 |
| 1 | பொது சுகாதாரப்பிரிவு | துப்புரவு ஆய்வாளர் (Sanitary Inspector) | 1 | நிலை – 11 | 35,400 – 1,30,400 |
| 2 | | துப்புரவு பணி மேற்பார்வையாளர் (Sanitary Supervisor) | 4 | நிலை – 03 | 16,600 – 60,800 |
| 3 | | களப்பணி உதவியாளர் (Field Assistant) | 1 | நிலை – 06 | 18,500 – 68,000 |
| | | **மொத்தம்** | **31** | | |

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் கீழ்க்கண்டுள்ள பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டது.

| **பணியாளர்** | **பணியிடம்** |
|---|---|
| மேலாளர் | 1 |
| உதவியாளர் | 2 |
| இளநிலை உதவியாளர்கள் | 9 |
| தட்டச்சர் | 1 (காலியாக உள்ளது) |
| பதிவறை எழுத்தர் | 1 |
| வருவாய் ஆய்வர் | 1 |
| வருவாய் உதவியாளர்கள் | 6 (1 பணியிடம் காலியாக உள்ளது) |
| அலுவலக உதவியாளர் | 1 |
| இரவு காவலர் | 1 (பணியிடம் காலியாக உள்ளது) |
| கணினி திட்ட அமைப்பாளர் | 1 |

வருவாய் நிதிக் கணக்கு மற்றும் குடிநீர் பிரிவு கணக்கின் கீழ் ஆணையாளரின் சம்பளம் மற்றும் படிகள் நீங்கலாக அனைத்து பணியாளர்களும் முறையே ரூ. **6,59,63,481/–** மற்றும் ரூ.**2,79,38,521/–** செலவினம் ஏற்பட்டுள்ளது.

## புதிய கணக்கு நடைமுறை

தமிழ்நாடு அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை எண்.(நிலை) 8 நாள்:12.01.2000–ன் படி இந்நகராட்சியில் ஏற்கனவே பராமரிக்கப்பட்டு வந்த கணக்கு முறையினை மாற்றி 01.04.2000 முதல் அறிக்கை ஆண்டிலும் 17.04.2017 முதல் புதிய கணக்கு முறை 7 எண்ணம் முறையினை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. புதிய கணக்கு திட்டத்தின் கீழ் வருவாய் நிதி கணக்கு, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதிக் கணக்கு என்ற மூன்று தலைப்பின் கீழ் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. இதற்கென வரவினம் மற்றும் செலவினம் குறித்து துணைப் பதிவேடுகளும் நன்முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## அச்சடித்தல்

நகராட்சிக்கு தேவையான புத்தகங்களும், நமூனாக்களும் சிதம்பரனார் மாவட்ட தொழிற்கூட்டுறவு அச்சக சேவை சங்கம், கோவில்பட்டி அச்சகத்திலிருந்து வாங்கப்படுகிறது. புத்தக படிவங்கள் மற்றும் பிரிண்டிங் அச்சடித்த வகைக்கு ரூ.7,13,022/– செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## நகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் வழங்கும் பணி – பணிக்குழு:

நகராட்சி குடிநீர் வினியோகப் பணிகளை சிறப்பாகச் செய்திட குடிநீர் விநியோகப் பிரிவில் கீழ்க்கண்ட பணியிடங்கள் உள்ளன.

| | |
|---|---|
| நகராட்சி பொறியாளர் – நிலை 3. | 1 |
| தண்ணீர் பணிப்பார்வையாளர் | 1 |
| மின்பணியாளர் நிலை–2 | 3 (பணி மாறுதல் காரணமாக ஒரு பணியிடம் காலியாக உள்ளது). |
| குழாய் பொருத்துநர் | 2 (1 பணியிடம் காலியாக உள்ளது) |
| வயர்மேன் | 2 பணியிடம் காலியாக உள்ளது. |
| மின்கம்பி உதவியாளர் | 2 (ஒரு பணியிடம் காலியாக உள்ளது) |
| விசை திருப்புநர் | 1 |
| டேப் கிளீனர் | 2 பணியிடம் காலியாக உள்ளது |
| காவலர் | 10 (எட்டு பணியிடம் காலியாக உள்ளது) |
| ஜீப், லாரி மற்றும் டில்லர் ஓட்டுநர் | 4 (ஒரு பணியிடம் காலியாக உள்ளது) |

**<u>சாலைகள்–பாலங்கள்–தோணித்துறைகள்–கட்டிடங்கள்</u>**

இந்நகராட்சியில் ஐந்து தரப்பட்ட சாலைகள் அதாவது சிமிண்ட் தளம், தார்தளம், கருங்கல் சல்லி சாலைகள், சரலைக்கல், மண்சாலைகள் உள்ளன. தெற்கே கன்னியாகுமரி முனையையும் வடக்கே மதுரையையும் இணைக்கக்கூடிய தேசீய நெடுஞ்சாலையின் துணைவழிச்சாலை ஒன்று உள்ளது. அறிக்கை ஆண்டில் கீழ்க்கண்ட விபரப்படி சாலைகள் நகராட்சியின் பராமரிப்பில் இருந்தது.

| சாலையின் விபரம் | 01.04.2022 நாளன்று (கி.மீ.) | 31.03.2023–ம் நாளன்று (கி.மீ.) |
|---|---|---|
| சிமிண்ட் சாலை உள்பட சிமிண்ட் கான்கிரீட் தார்சாலை | 6.551 | 4.362 |
| தார் சாலை | 14.298 | 16.175 |
| கல் சாலை | –– | –– |
| பேவர் பிளாக் சாலை | 16.925 | 17.237 |
| மண்சாலை | 2.394 | 2.394 |
| **ஆக மொத்தம்** | **40.168** | **40.168** |

நகராட்சி பகுதியில் உள்ள தேசிய நெடுஞ்சாலையின் நீளம் 2.00 கி.மீ. ஆகும்.

## சாத்தூர் நகராட்சி

### A) 01.04.2022 முதல் 31.03.2023 முடிய நகராட்சியில் செய்து முடிக்கப்பட்ட / நடைபெற்று வரும் திட்டப்பணிகளின் விபரம்

| வ. எண் | விரிவாக்கத் திட்டத்தின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ) இலட்சத்தில் | ஒப்புதல் அல்லது பணி துவங்கப்பட்ட நாள் | செயலாக்கத்தில் உள்ள பணிகளின் தற்போதைய நிலை / குறிப்புகள் |
|---|---|---|---|---|
| 1 | 2018–2019ம் ஆண்டிற்கு தூய்மை இந்தியா திட்டத்தின் (7th SHPC) கீழ் நகராட்சி உரக்கிடங்கில் பையோமைனிங் முறையில் குப்பைகளை பிரிக்கும் பணியினை மேற்கொள்ளுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.22866/2018/பி3, நாள்: 23.08.2018ல் நிர்வாக அனுமதி அளித்து அதற்கு நிதி ஒதுக்கீடாக மத்திய மாநில அரசுகளின் நிதி ஒதுக்கீடாக ரூ.453.60 லட்சமும், நகராட்சி பங்குத் தொகையான ரூ.504.00 லட்சம் ஒதுக்கீடு செய்து பணிகளை மேற்கொள்ள அனுமதித்து உத்திரவிடப்பட்டுள்ளது. | 504.00 | 23.08.2018 | நகராட்சிக்குச் சொந்தமான உரக்கிடங்கில் பையோமைனிங் முறையில் குப்பைகளை பிரித்து உரம் தயாரிக்கும் பணியினை மேற்கொள்ளுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு 22.01.2019ல் பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. |
| 2 | 2018–2019ம் ஆண்டிற்கு தூய்மை இந்தியா திட்டத்தின் (7th SHPC) கீழ் பசுமை உரக்குடில் அமைக்கும் பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.22866/2018/பி3, நாள்: 23.08.2018ல் நிர்வாக அனுமதி அளித்து அதற்கு நிதி ஒதுக்கீடாக மத்திய மாநில அரசுகளின் நிதி ஒதுக்கீடாக ரூ.137.07 லட்சமும், நகராட்சி பங்குத் தொகையான ரூ.15.23 லட்சம் ஒதுக்கீடு செய்து பணிகளை மேற்கொள்ள அனுமதித்து உத்திரவிடப்பட்டுள்ளது. | 152.30 | 23.08.2018 | பசுமை உரக்குடில் அமைக்கும் பணியினை மேற்கொள்ளும் பொருட்டு வார்டு எண்.1, 3 மற்றும் 14ல் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பந்தக்காரருக்கு 12.10.2018ல் பணி உத்திரவு வழங்கப்பட்டது. பணியினை துவங்கும் நிலையில் வார்டு எண்.1 மற்றும் 3ல் உள்ள பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்து சென்னை உயர்நீதிமன்றம், மதுரைக்கிளையில் வழக்கு எண்.3459/2019 வழக்கு தொடர்ந்துள்ளனர். இதனால் வார்டு எண்.3–க்கு மாற்று இடம் தேர்வு செய்து தற்போது பணி முடிக்கப்பட்டுள்ளது.<br>வார்டு எண்.1–க்கு மாற்று இடம் தேர்வு செய்து திருத்திய நிர்வாக அனுமதி 16.09.2021 பெறப்பட்டு தற்போது பணி முடிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | 2020–2021–ம் ஆண்டிற்கு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.200.00 லட்சம் மதிப்பீட்டில் சாலைப் பணிகளை எடுத்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.9025/2020/இ3 நாள்:17.07.2020, ரூ.150.00 லட்சம் அரசு மானியமாகவும், ரூ.50.00 லட்சத்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் நிர்வாக அனுமதி அளித்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. | 200.00 | 17.07.2020 | சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்.1 பெரியார்நகர் மெயின்ரோடு, வார்டு எண்,19 மாரியம்மன் கோவில் தெரு வார்டு எண்,20 முருகன் கோவில் தெரு வார்டு எண்,5&10 பழைய படந்தால் ரோடு வார்டு எண்,3 அன்பு இல்லம் காம்பளக்ஸ் ரோடுகளில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்சாலைகள் மற்றும் வார்டு எண் 6, இராஜாகோபால் மண்டபம் தெரு,வார்டு எண்,7 நடராஜா தியேட்டர் குறுக்கு தெரு வார்டு எண் .3 ஓரிஜினல் கிணற்று தெரு, கார்த்திகேயன் பைனான்ஸ் தெரு, நீயூகாலனி மற்றும் எல்.ஐ.சி. ஆபிஸ் குறுக்கு தெருவில் பேவர்பிளாக் சாலைகள் அமைக்கும் பணியினை எடுத்துக் கொள்ளப்பட்டு பணியினை எடுத்துச் செய்யும் பொருட்டு அதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு இறுதி செய்யப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு, பணி முடிக்கப்பட்டுள்ளது. |
| 4 | 2020–2021ம் ஆண்டிற்கு சிறப்பு சாலைத் திட்டத்தின் கீழ் (SRP) ரூ.800.00 இலட்சம் மதிப்பீட்டில் நகர் பகுதியில் வடிகாலுடன் கூடிய சிமெண்டிலான பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.20557/2020/இ3 நாள்:14.12.2020, ரூ.680.00 லட்சம் அரசு மானியமாகவும், ரூ.120.00 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் நிர்வாக அனுமதி அளித்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. | 800.00 | 14.12.2020 | <u>சிப்பம் – 1 :</u> வார்டு எண்.2 மற்றும் 6–ல் மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணியினை ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துச் செய்ய நகராட்சி நிர்வாக தலைமைப் பொறியாளர் அவர்களால் 21.12.2020–ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 18.02.2021–ல் மறுஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு அதனை இறுதி செய்து பணிகளை மேற்கொள்ள 24.02.2021–ல் பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது.<br><br><u>சிப்பம் – 2 :</u> வார்டு எண்.6 மற்றும் 7–ல் மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணியினை ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துச் செய்ய நகராட்சி நிர்வாக தலைமைப் பொறியாளர் அவர்களால் 21.12.2020–ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 18.02.2021–ல் மறுஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு அதனை இறுதி செய்து பணிகளை மேற்கொள்ள 24.02.2021–ல் பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | **<u>சிப்பம் – 3 :</u>** வார்டு எண்.8–ல் மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணியினை ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துச் செய்ய நகராட்சி நிர்வாக தலைமைப் பொறியாளர் அவர்களால் 21.12.2020–ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 18.02.2021–ல் மறுஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு அதனை இறுதி செய்து பணிகளை மேற்கொள்ள 24.02.2021–ல் பணி உத்திரவு வழுங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது. |
| | | | | **<u>சிப்பம் – 4 :</u>** வார்டு எண்.8 மற்றும் 21–ல் மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணியினை ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துச் செய்ய நகராட்சி நிர்வாக தலைமைப் பொறியாளர் அவர்களால் 21.12.2020–ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 18.02.2021–ல் மறுஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு அதனை இறுதி செய்து பணிகளை மேற்கொள்ள 24.02.2021–ல் பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது. |
| 5 | 2021–2022–ம் ஆண்டிற்கு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (KNMT) ரூ. 199.50 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சியில் 2 பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண். 92 நாள்: 30.10.2021, ரூ. 199.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி அளித்து உத்திரவு வழுங்கப்பட்டுள்ளது. | 199.50 | 30.10.2021 | சாத்தூர் நகராட்சியில் நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பொருட்டு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு, பணி முடியும் நிலையில் உள்ளது. |
| | | | | சாத்தூர் நகராட்சியில் வார்டு எண்.3 நியூ காலனியில் பூங்கா மற்றும் விளையாட்டு திடல் அமைக்கும் பொருட்டு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது. |
| 6 | 2021–2022–ம் ஆண்டிற்கு 15–வது மத்திய நிதி குழு திட்டத்தின் கீழ் (15th CFC) ரூ.84.00 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சியில் 9 பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.31116/2021/Amrut–2 நாள்: 06.12.2021, ரூ. 84.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி அளித்து உத்திரவு வழுங்கப்பட்டுள்ளது. | 84.00 | 06.12.2021 | 1. சாத்தூர் நகராட்சி பைபாஸ் தலைமை நீரேற்று நிலையத்தில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் 25 எச்.பி பம்ப் இன்டக்சன் மோட்டார் அமைக்கும் பணி மேற்கொள்ளும் பொருட்டு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது.<br>2. சாத்தூர் நகராட்சி பைபாஸ் தலைமை நீரேற்று நியைத்தில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் மோட்டார் பம்ப் அறை அமைக்கும் பணி மேற்கொள்ளும் பொருட்டு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | 3. சாத்தூர் நகராட்சியில் உள்ள பிரதான குழாய் மற்றும் தலைமை நீரேற்று நிலையம் சப்ளை மெயின் குழாயில் சி.ஐ சுலிஸ் வால்வு ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளும் பொருட்டு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது.<br>4. சாத்தூர் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிக்கு ரூ.3.60 இலட்சம் மதிப்பீட்டில் Baling Machine ( 50tonne Capacity) வாங்கும் பணி மேற்கொள்ளும் பொருட்டு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது.<br>5. சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட பி.டி.ஓ காலனி, நென்மேனி ரோடு, அண்ணாநகர் மற்றும் வெள்ளக்கரை ரோட்டில் உள்ள கழிப்பறைகளை ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் மராமத்து பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது<br>6. சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்.16 வடக்கு ரத வீதியில் ரூ.9.60 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கழிப்பறை கட்டும் பணி மேற்கொள்ளும் பொருட்டு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது<br>7. சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட உரக்கிடங்கில் ரூ. 20.00 இலட்சம் மதிப்பீட்டில் வள மீட்பு மையம் (RRC - 20m X 10m) அமைக்கும் பணி மேற்கொள்ளும் பொருட்டு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது<br>8. சாத்தூர் நகராட்சிக்கு சொந்தமான ஆடு அடி சாலையில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் மராமத்து பணி மேற்கொள்ளும் பொருட்டு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | **9.** சாத்தூர் நகராட்சி வார்டு எண்.**1** பெரியார் நகர் அக்வா அரினா எதிரில் உள்ள பூங்காவில் ரூ. **4.00** இலட்சம் மதிப்பீட்டில் பூங்காவை சுற்றி வேலி (L=150.00m) அமைக்கும் பணி மேற்கொள்ளும் பொருட்டு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது. |
| 7 | **2021–2022–**ம் ஆண்டிற்கு நமக்கு நாமே திட்டத்தின் மூலம் (NNT) ரூ.**2.00** இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்.**1** பெரியார் நகர் பூங்காவில் விளையாட்டு உபகரணங்கள் அமைக்கும் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண்.**71** நாள்: **13.09.2021** ரூ. **2.00** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி அளித்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. | **2.00** | **13.09.2021** | **1.** சாத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**1** பெரியார் நகர் பூங்காவில் ரூ.**2.00** இலட்சம் மதிப்பீட்டில் விளையாட்டு உபகரணங்கள் வாங்கி அமைக்கும் பணி மேற்கொள்ளும் பொருட்டு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது.<br><br>**2.** சாத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**1** பெரியார் நகர் (அக்வா அரினா எதிர்புறம்) பூங்காவில் ரூ.**11.23** இலட்சம் மதிப்பீட்டில் நடைபாதை (95.58mx2.0m) மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வாங்கி அமைக்கும் பணி மேற்கொள்ளும் பொருட்டு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது.<br><br>**3.** சாத்தூர் நகராட்சிக்குட்பட்ட மேலக்காந்தி நகர் வெள்ளக்கரை சாலையில் உள்ள அங்கன்வாடி மையத்தில் ரூ.**1.38** இலட்சம் மதிப்பீட்டில் குழந்தைகளுக்கான கழிப்பறை மற்றும் ஈமக்கரிய நீர்மாலை தொட்டி அமைக்கும் பொருட்டு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | 4. சாத்தூர் நகராட்சிக்குட்பட்ட குருலிங்காபுரம் பூங்காவில் ரூ.10.20 இலட்சம் மதிப்பீட்டில் நடைபாதை (95.58mx2.0m) மற்றும் விளையாட்டு உபகரணங்கள் பொருத்துதல் பணி மேற்கொள்ளும் பொருட்டு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது.<br><br>5. சாத்தூர் நகராட்சிக்குட்பட்ட பெரியார் நகர் பிள்ளையார் கோவில் தெருவில் உள்ள பூங்காவில் ரூ.8.75 இலட்சம் மதிப்பீட்டில் நடைபாதை (95.58mx2.0m) மற்றும் விளையாட்டு உபகரணங்கள் பொருத்துதல் மற்றும் பூங்கா மேம்படுத்தப்படுதல் பணி மேற்கொள்ளும் பொருட்டு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது |
| 8 | 2022–2023–ம் ஆண்டிற்கு தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு சேமிப்பு திட்டத்தின் கீழ் (TURIP) நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தார்சாலை மற்றும் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 24826/2022/SS2 நாள்: 07.09.2022, ரூ.417.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி அளித்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. | ரூ.394.50 | 12.10.2022 | 1. சாத்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 8 தெருக்களில் தார்சாலை அமைக்கும் பணியினை ரூ.135.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளும் பொருட்டு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது.<br><br>2. சாத்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 35 தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணியினை ரூ.130.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளும் பொருட்டு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.<br><br>3. சாத்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 34 தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணியினை ரூ.129.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளும் பொருட்டு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | 2022–2023–ம் ஆண்டிற்கு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் மற்றும் அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் (KNMT & AMRUT 2.0) நகராட்சியில் பூங்காவினை மேம்படுத்தும் 2 பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.8879/2022/P1 நாள்: 02.11.2022, ரூ.47.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி அளித்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. | ரூ.47.00 | 02.12.2022 | 1. சாத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4–ல் உள்ள KCAD பூங்காவில் ரூ.22.00 இலட்சம் மதிப்பீட்டில் பூங்காவினை மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.<br>2. சாத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4–ல் உள்ள Manohran பூங்காவில் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் பூங்காவினை மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது |
| 10 | 2022–2023–ம் ஆண்டிற்கு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (KNMT) நகராட்சியின் பேருந்து நிலையத்தினை ரூ.47.00 இலட்சத்தில் மேம்படுத்தும் பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை நிலை (4D) எண்.23 நாள்: 01.12.2022–ல் ரூ.33.00 இலட்சம் அரசு மானியமாகவும் ரூ.14.00 இலட்சம் நகராட்சி பங்கு தொகையாகவும் ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி அளித்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. | ரூ.47.00 | 04.01.2023 | 1. சாத்தூர் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தினை ரூ.47.00 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணியினை மேற்கொள்ளுவதற்கு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. |
| 11 | 2022–2023–ம் ஆண்டிற்கு நகர்புற உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் (SUIDF) நகராட்சியில் உள்ள தெருவிளக்குகளை LED விளக்குகளாக மாற்றி அமைக்கும் பணியினை மேற்கொள்ள நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.30520/2022/WB நாள்: 04.11.2022, ரூ.106.72 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி அளித்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது | ரூ.106.72 | 06.03.2023 | 1. சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட தெருவிளக்குகளை ரூ.106.72 இலட்சம் மதிப்பீட்டில் LED விளக்குகளாக மாற்றி அமைக்கும் பணியினை மேற்கொள்ளுவதற்கு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | **2022–2023**–ம் ஆண்டிற்கு **15**–வது மத்திய நிதி குழு திட்டத்தின் கீழ் (15th CFC) ரூ.**42.75** இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சியின் விடுபட்ட மற்றும் விரிவாக்க பகுதிகளில் LED விளக்குகள் அமைக்கும் பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.**18277/2022**/CFC–**2** நாள்: **14.10.2022**, ரூ. **42.75** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி அளித்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. | | | **1.** சாத்தூர் நகராட்சியில் விடுபட்ட மற்றும் விரிவாக்க பகுதிகளில் புதியதாக LED விளக்குகள் ரூ.**42.75** இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கும் பணியினை மேற்கொள்ளுவதற்கு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. |
| 13 | **2022–2023**–ம் ஆண்டிற்கு தூய்மை இந்தியா திட்டம் **2.0**–ன் கீழ் (SBM 2.0) ரூ.**43.00** இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி உரக்கிடங்கில் Materials Recovery Factilites (MRF) அமைக்கும் பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் கடித ந.க.எண்.**2800/2022**/ஆ–**2** நாள்: **23.12.2022**, ரூ. **21.00** இலட்சம் மத்திய அரசு மானியமாகவும், ரூ.**14.00** இலட்சம் மாநில அரசு மானியமாகவும் ரூ.**8.00** இலட்சம் நகராட்சி பங்குத் தொகையாகவும் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி அளித்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது | ரூ.**43.00** | **30.01.2023** | **1.** சாத்தூர் நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் Materials Recovery Factilites (MRF) அமைக்கும் பணியினை ரூ.**43.00** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளுவதற்கு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. |
| 14 | **2022–2023**–ம் ஆண்டிற்கு நமக்கு நாமே திட்டத்தின் கீழ் (NNT) ரூ.**16.50** இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சியில் உள்ள பூங்காவிற்கு வேலி மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வாங்கி பொருத்தும் **2** பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.**8880/2022**/P1 நாள்: **13.02.2023**, ரூ. **11.06** இலட்சம் அரசு மானியமாகவும், ரூ.**5.44** இலட்சம் பொதுமக்கள் பங்கு தொகையாகவும் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி அளித்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. | ரூ.**16.50** | **15.03.2023** | **1.** சாத்தூர் நகராட்சிக்குட்பட்ட HDFC வங்கி பக்கத்தில் உள்ள பூங்காவில் வேலி மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வாங்கி பொருத்தும் பணியினை ரூ.**8.00** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளுவதற்கு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | 2. சாத்தூர் நகராட்சிக்குட்பட்ட Karthikeyan Finance அருகில் உள்ள பூங்காவில் வேலி மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வாங்கி பொருத்தும் பணியினை ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளுவதற்கு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது |
| 15 | 2022–2023–ம் ஆண்டிற்கு நமக்கு நாமே திட்டத்தின் கீழ் (NNT) ரூ.5.89 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சியில் உள்ள பூங்காவில் சோலார் விளக்குகள் அமைக்கும் பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.567/2023/ஆ1 நாள்: 16.03.2023, ரூ. 3.93 இலட்சம் அரசு மானியமாகவும், ரூ.1.96 இலட்சம் பொதுமக்கள் பங்கு தொகையாகவும் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி அளித்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. | ரூ..5.89 | 10.04.2023 | 1. சாத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1–ல் உள்ள பெரியார் நகர் மற்றும் பிள்ளையார் கோவில் தெருவில் உள்ள பூங்காக்களில் 14 எண்ணம் சோலார் விளக்குகள் அமைக்கும் பணியினை ரூ.5.89 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளுவதற்கு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது |
| 16 | 2022–2023–ம் ஆண்டிற்கு 15–வது மத்திய நிதி குழு திட்டத்தின் கீழ் (15th CFC Tied Grant) திடக்கழிவு மேலாண்மை பணிக்கு BOV வாகனம் ரூ.22.00 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கும் பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.18277/2022/CFC–1 நாள்: 21.03.2023, ரூ. 22.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி அளித்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. | ரூ.22.00 | 09.05.2023 | 1. சாத்தூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு 11 எண்ணம் BOV வாகனம் வாங்கும் பணியினை ரூ.22.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளுவதற்கு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, சப்ளை உத்திரவு வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 17 | 2022–2023–ம் ஆண்டிற்கு முதலமைச்சர் காலை உணவு திட்டத்தின் மூலம் ஒருங்கிணைந்த சமையற்கூடம் அமைப்பதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.17404/2022/M–1 நாள்: 10.03.2023,–ல் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி ரூ. 9.50 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள சாத்தூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.229/2023/எம்1 நாள்:21.03.2023–ல் நிர்வாக அனுமதி அளித்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது | ரூ.9.50 | 10.04.2023 | 1. சாத்தூர் நகராட்சியில் முதலமைச்சர் காலை உணவு திட்டத்தின் மூலம் ஒருங்கிணைந்த சமையற்கூடம் அமைப்பதற்கு ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளுவதற்கு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி முடியும் நிலையில் உள்ளது. |
| 18 | 2022–2023–ம் ஆண்டிற்கு நகர்புற உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் (SUIDF) நகராட்சியில் புதிய பாதாள சாக்கடை திட்டத்தின் மூலம் குடியிருப்புகளுக்கு Internal Plumbing வழியாக 6500 எண்ணம் இணைப்புகள் வழங்குவதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை நிலை (MS) எண்.18 நாள்: 13.02.2023–ல் ரூ.450.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி அளித்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. | ரூ.450.00 | 15.05.2023 | 1. சாத்தூர் நகராட்சியில் புதிய பாதாள சாக்கடை திட்டத்தின் மூலம் குடியிருப்புகளுக்கு Internal Plumbing வழியாக 6500 எண்ணம் இணைப்புகள் வழங்குவதற்கு ரூ.450.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளுவதற்கு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. |

## பயணிகள் விடுதி

நகராட்சியின் நிர்வாகத்தின் பராமரிப்பில் பயணிகள் விடுதி ஏதுமில்லை. நெடுஞ்சாலை மற்றும் கிராம பணித்துறையின் நிர்வாகத்தில் ஒரு பயணிகள் விடுதி உள்ளது.

## சத்திரங்கள்

நகராட்சியின் பராமரிப்பில் சத்திரங்கள் ஏதும் இல்லை.

## தளவாடச் சாமான்கள் மற்றும் அறைகள்:

இந்நகராட்சியில் சாலைகள் சீர்படுத்தும் இயந்திரங்கள் இல்லை.

அடிப்படை வசதித்திட்டத்தின் கீழ் 1997–98ம் ஆண்டிற்கு குடிநீர் விநியோக பிரிவிற்கு முழுமான்யத்திட்டத்தின் கீழ் ஒரு 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட டேங்கருடன் கூடிய லாரி ஒன்று வாங்கப்பட்டு மக்களுக்கு பயன்பட்டு வருகிறது. மேலும் கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் கோவில்பட்டியிலிருந்து சாத்தூர் வரையுள்ள 24கி.மீ. நீளத்திற்கு போடப்பட்டுள்ள குடிநீர் மெயின் பைப்லைனை பராமரிக்கவும், கண்காணிக்கவும் ஜீப் ஒன்று பயன்பட்டு வருகிறது. வறட்சி நிவாரண நிதியில் இருந்து குடிநீர் விநியோகம் செய்வதற்காக 1 டில்லர் டேங்கருடன் மாவட்ட ஆட்சியாளரால் வழங்கப்பட்டு குடிநீர் பகிர்மான குழாய் இல்லாத மற்றும் குடிநீர் கிடைக்காத பகுதிகளுக்கு அதன் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதன் மூலம் நகரின் சில பகுதிகளில் மட்டுமே குடிநீர் தேவை பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

சத்துணவு திட்டத்திற்கு வழங்கப்பட்ட இரு சத்துணவு டில்லர்கள் மூலம் பொதுமக்களுக்கும், 2 சத்துணவு மையங்களுக்கும் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் இந்நகராட்சிக்கு அடிப்படை வசதித் திட்டத்தின் கீழ் வாகனம் வாங்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.36695/99/பி1 நாள்.16.6.99 உத்திரவில் அனுமதிக்கப்பட்ட ரூ.5.00 லட்சத்துடன் பொது நிதியிலிருந்து ரூ.47834/– கூடுதலாக செலவிட்டு குடிநீர் விநியோகத்திற்கு 3500 கொள்ளளவு கொண்ட டேங்கர் லாரி ஒன்று வாங்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வரப்படுகிறது.

சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.41846/2003/இ1 நாள்:01.10.2003–ன்படி இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து சென்னை மகேந்திரா நிறுவனத்தின் இன்வாய்ஸ் நம்பர் 5437863619, நாள்:23–02–04ன்படி, தொகை ரூ.3,95,822/– செலவில் புதிய மார்சல் ஜீப் ஒன்று வாங்கப்பட்டு, தற்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## ஈப்பு வாகனம் :

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.10290/2022/எம்3, நாள்:17.05.2022–ல் நகர்மன்ற தலைவர் அவர்களுக்கு ஸ்கார்பியோ வாகனமும், நகராட்சி ஆணையர் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு ஒரு பொலிரோ வாகனமும் வாங்க அனுமதி அளிக்கப்பட்டதன்படி புதியதாக 2 ஈப்பு வாகனம் வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## தெருவிளக்குகள் பராமரிப்பு:

இந்நகராட்சியின் பராமரிப்பில் உரிமம் பெற்று மின்விளக்குத் திட்டம் எதுவும் இல்லை. தமிழ்நாடு மின்வாரியத்தின் மூலம் மின்சாரம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தெருவிளக்குகள் பராமரிக்கும் பொறுப்பினை 1.10.89–ம் தேதி முதல் நகராட்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. தெருவிளக்குகளுக்குத் தேவையான குழல் விளக்குகள் மற்றும் சோக்குகள் விநியோகம் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் அதிகாரப்படுத்தப்பட்ட கம்பெனிகளிடமிருந்து வாங்கப்பட்டு வருகின்றன. தெருவிளக்குகள் பராமரிப்பதற்கென இரண்டு மின்பணியாளர் நியமனம் செய்யப்பட்டதில் இரு மின்ப்ணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். மேலும் தெருவிளக்கு பராமாரிப்பு பணிக்கு டாட்டா ஏ.சி வாகனம் டி.என்.67 ஏ.சி 5394 பயன்படுத்தப்பட்டு வருகிறது.

| விளக்குகளின் விபரம் | 01.04.2022 | 31.03.2023 |
|---|---|---|
| 1. குழல் விளக்குகள் | 924 | 924 |
| 2. மெற்குரி விளக்குகள் | 0 | 0 |
| 3. அவசரகால விளக்கு (CFL) | 100 | 100 |
| 4. சோடியம் ஆவிவிளக்கு | 143 | 143 |
| 5. உயர்கோபுர மின்விளக்குகள் | 16 | 16 |
| 6. சிறிய உயர்கோபுர மின்விளக்குகள் | 10 | 10 |
| | 1193 | 1193 |

மின்வாரியத்திடமிருந்து தெருவிளக்குகள் பராமரிப்பை நகராட்சி ஏற்றுக்கொண்ட சமயம் 719 தெருவிளக்குகள் மட்டும் ஒப்படைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அறிக்கையாண்டிலும் பராமரிக்கப்பட்டு தற்போது 1193 தெருவிளக்குகள் உள்ளது. தெருவிளக்குகளை பராமரிக்க ரூ. 2233617/– செலவிடப்பட்டது. மேலும் மின்கட்டணமாக ரூ. 2472114/–ம் செலவிடப்பட்டுள்ளது.

## கல்வி

ஊர் வளர்ச்சி உள்ளாட்சித்துறை அரசு ஆணை எண்.677 நாள்.3.4.1972ன் படி சாத்துார் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து இரண்டு ஆரம்பப் பள்ளிகள் இந்நகராட்சிக்கு 11.7.72–ல் ஒப்படைக்கப்பட்டது. இந்நகராட்சி நிர்வாகத்தின் கீழ் வெள்ளக்கரை சாலையில் ஒரு நடுநிலைப்பள்ளியும், மேலக்காந்தி நகரில் ஒரு நடுநிலைப் பள்ளியும் உள்ளது. நடுநிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்புகள் வரை உள்ளது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசு துறைச் செயலாளர் அவர்களின் 12.2.90–ம் தேதிய கடிதம் எண்.3722/பணி6/90–2 எண் படி பள்ளி ஆசிரியைகளின் அனைத்து ஆவணங்களும், சாத்தூர் உதவி கல்வி அதிகாரி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் 01.04.90 முதல் ஊதியம் நகராட்சி நிதியில் இருந்து வழங்கப்படவில்லை.

## இருப்பிடம் மற்றும் கருவிகள்:

இந்நகர் வெள்ளக்கரை சாலையில் உள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளி நகராட்சி கட்டிடத்தில் இயங்கி வருகிறது. மேலும் மேலக்காந்தி நகரில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான பள்ளிக் கட்டிடத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.4.00 லட்சங்கள் நிதியுதவி பெறப்பட்டு கட்டுமானப் பணிகள் முடிவடைந்து ஆரம்பப்பள்ளி வாடகைக் கட்டிடத்திலிருந்து சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

## மேல்நிலைப்பள்ளி:

இந்நகராட்சி பகுதிகளில் நகராட்சி மேல்நிலைப்பள்ளி ஒன்றும், தனியார் மேல்நிலைப்பள்ளிகள் மூன்றும் மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் மூன்றும் உள்ளன.

## நூல் நிலையம்:

இந்நகராட்சியின் நிர்வாகத்தில் நூல் நிலையமும், படிப்பகமும் இல்லை. இராமநாதபுரம் மாவட்ட நூலக ஆணைக்குழு நிர்வாகத்தின் கீழ் ஒரு நூல் நிலையமும், படிப்பகமும் இயங்கி வருகிறது.

## பொது சுகாதாரம் – பொது சுகாதார மருத்துவ சிகிச்சை:
## மருத்துவமனைகள்:

நகராட்சியில் 01.04.2012 முதல் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அறிக்கை ஆண்டில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு மருத்துவர், ஒரு ஆய்வக உதவியாளர், இரு மகப்பேறு உதவியாளர்கள், ஒரு ஆயா மற்றும் இரு மருத்துவமனை பணியாளர்கள் பணிபுரிகின்றனர். மேலும் நகரில் ஒரு அரசினர் மருத்துவமனை, 11 தனியார் மருத்துவமனைகள் மற்றும் 8 கிளினிக்குகள் மூலம் பொதுமக்களுக்கு போதிய மருத்துவ வசதி அளிக்கப்பட்டு வருகிறது.

## அமைப்பும் பணியாளர்களும்:

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் கீழ்க்கண்ட பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

| | |
|---|---|
| சுகாதார ஆய்வாளர் | 2 |
| சுகாதார மேற்பார்வையாளர்கள் | 4 ( ஒரு பணியிடம் காலியாக உள்ளது) |
| மகப்பேறு உதவியாளர்கள் | 2 |
| மகப்பேறு ஆயாக்கள் | 2 ( ஒரு பணியிடம் காலியாக உள்ளது) |
| லாரி ஓட்டுநர் | 2 |
| மினிலாரி ஓட்டுநர் | 1 |
| லாரி துலக்குநர் | 1 |
| துப்புரவு பணியாளர்கள் | 31 |

பொது சுகாதாரப் பிரிவு நிர்வாக செலவினங்களுக்கு இந்த அறிக்கை ஆண்டில் மொத்தம் ரூ.1228547/– செலவிடப்பட்டுள்ளது. மேற்படி செலவினங்கள் நகராட்சி பொதுநிதி கணக்கிலிருந்து மேற்கொள்ளப் பட்டுள்ளது.

**விளம்பரம்:**

நகரின் முக்கிய பகுதிகள் மற்றும் குடியிருப்பு பகுகளில் குப்பைகளை தரம் பிரித்தல் மற்றும் சுற்றுப்புற சுகாதாரம், டெங்கு காய்ச்சல், கோவிட்–19, பாதாளச்சாக்கடையில் மனிதர்கள் இறங்கி பணி செய்யத்தடை மற்றும் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேனர்கள் நிறுவப்பட்டு பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மற்றும் விழிப்புணர்வு பேரணிகள் நடத்தப்பட்டது. கொரோனா தடுப்பூசி 18 வயதுக்கு மேற்பட்டோர்களுக்கு செலுத்தப்பட்டு வருகிறது.

**பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள்**

இந்நகராட்சியில் பிறப்பு இறப்பு பதிவு பிரிவுகள் இரண்டு செயல்பட்டு வருகிறது. துப்புரவு ஆய்வாளர் இருவர் பிறப்பு இறப்பு பதிவு பணிகளை செய்து வருகின்றனர். அன்றாடம் பிறப்பு மற்றும் இறப்புகள் கணினியில் பதிவு செய்யப்பட்டு சான்றுகள் வழங்கப்படுகிறது.

2022ம் ஆண்டில் பதிவான பிறப்புகள் – 733, இறப்புகள் – 337, இறந்து பிறந்தவை – 5.

**நகர ஆரம்ப சுகாதார நிலையம்:–**

சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அரசு ஆணை எண்.103, நாள்: 15.04.2010ன்படி ஒரு லட்சத்திற்கு குறைவான மக்கள் தொகை உள்ள 60 நகராட்சிகளிலும் பொது மக்களின் பொது சுகாதாரத்தை மேம்படுத்த ஒரு மருத்துவ அலுவலர், ஒரு மருந்தாளுநர், ஒரு லேப் டெக்னீசியன், ஐந்து செவிலியர்கள் மற்றும் இரு மருத்துவமனை பணியாளர்கள் பணியிடங்கள் புதிதாக தோற்றுவித்து நகர்நல மையம் அமைக்க உத்திரவிடப்பட்டது. அதன் பிரகாரம் சாத்தூர் நகராட்சியில் 07.04.2012 முதல் நகர் நலமையம் செயல்பட்டு வருகின்றது. அறிக்கையாண்டில் மருத்துவ அலுவலர் தலைமையில் ஒரு லேப் டெக்னீசியன் மற்றும் இரு மருத்துவமனை பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். குழந்தைகள், கர்ப்பிணி தாய்மார்களுக்கு தடுப்பூசி மற்றும் மருந்து, மாத்திரைகள் வழங்கப்படுகின்றன.

நகர்நல மையத்தில் தொற்றா நோய்களான (Non Communicable diseases) புற்றுநோய், இரத்தக்கொதிப்பு மற்றும் சர்க்கரை நோய்களுக்கான சிகிச்சை மையம் அரசால் நியமிக்கப்பட்ட செவிலியர் (Staff Nurse) மூலம் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தில் மேற்கண்ட நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து அதற்குண்டான மருத்து சிகிச்சை அளிக்கப்பட்டும், மேல்சிகிச்சை தேவைப்படுபவர்களுக்கு பரிந்துரையும் செய்யப்படுகிறது.

**மக்களைத் தேடி மருத்துவம்**

மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தின் கீழ் 4159 பயனாளிகள் பயனடைந்தனர்.

## நோய் தடுப்பு மருந்து அளிக்கும் பணி 2022–2023

அறிக்கை ஆண்டில் (2022–2023) இந்நகராட்சியில் கீழ்க்கண்ட நோய்தடுப்பு ஊசிகள் போடப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1. | கருவுற்ற தாய்மார்களுக்கு | 316 |
| 2. | காசநோய் தடுப்பு ஊசி | 306 |
| 3. | பென்டாவேலண்ட் | 287 |
| 4. | போலியோ தடுப்பு மருந்து | 287 |
| 5. | தட்டம்மை தடுப்பு ஊசி | 306 |
| 6. | மூன்று நோய் தடுப்பு ஊசி (DPT) | 306 |
| 7. | மஞ்சள்காமாலை தடுப்பு ஊசி | 306 |
| 8. | மூளைக்காய்ச்சல் தடுப்பு ஊசி | 306 |
| 9. | ரோட்டா (Rota) சொட்டு மருந்து | 293 |

## போலியோ நோய் தடுப்பு முகாம்

2022–2023ம் வருடம் சிறப்பு பல்ஸ் போலியோ நோய்த்தடுப்பு சொட்டு மருந்து முகாம்கள் நடைபெறவில்லை.

## இறப்பு வீதம், கொள்ளை நோய்கள் மற்றும் பிறநோய்கள்

2023ம் ஆண்டில் கொரோனா நோயால் இறப்புகள் ஏதும் இல்லை. கொள்ளை நோய் மற்றும் பிற நோய்களால் பாதிக்கப்பட்டவர்களின் விவரம்

| கொள்ளை நோய்: | |
|---|---|
| காலரா | இல்லை |
| காசநோய் | இல்லை |
| தட்டம்மை | இல்லை |
| டைபாய்டு | இல்லை |
| மூளைக்காய்ச்சல் | இல்லை |
| கொரோனா | இல்லை |

அறிக்கை ஆண்டில் நகரில் காலரா நோய் எதுவும் ஏற்படவில்லை. தொற்று நோய்கள் வராமல் தடுக்கப் போதிய மருந்துகள், கிருமிநாசினிகள் இருப்பில் உள்ளது.

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சியில் கொள்ளை நோய்களால் பாதிக்கப்பட்டு இறந்தவர் யாரும் இல்லை. துப்புரவு ஆய்வாளர்கள் பிறப்பு, இறப்பு பதிவு வேலைகளையும், நோய் தடுப்பு பணிகளையும் கவனித்து வருகிறார்கள். காலையில் துப்புரவு பணிகளை மேற்பார்வை செய்தல் மற்றும் மாலையில் பிறப்பு இறப்பு பதிவு செய்தல் நகல் படிவங்கள் மற்றும் பிற அலுவலக பணிகளையும் கவனித்து வருகிறார்கள்.

அறிக்கை ஆண்டில் மலேரியா நோய் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் இல்லை. இந்நகரில் 17 வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டம் நடைமுறையில் உள்ளது. எஞ்சிய 7 வார்டுகளில் கழிவுநீர் கால்வாய்கள் அமைத்து கழிவுநீர் அப்புறப்படுத்தப்படுகிறது.

**<u>பொது சுகாதாரம்:</u>**

1. அறிக்கை ஆண்டில் **16** பொது சமுதாய கழிப்பறைகளும், **5** பொது கழிப்பறைகளும் இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அதில் நச்சுத்தடை தொட்டியுடன் கூடிய கழிப்பறை **– 15**, பாதாளச் சாக்கடைத் திட்டத்துடன் இணைக்கப்பட்ட கழிப்பறை **– 6.**

2. இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவுகள் நகராட்சி உரக்கிடங்கிற்கு எடுத்துச் செல்லும் பணிகளுக்கு ஒரு லாரி மற்றும் இரு இலகுரக வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆரம்ப சேகரிப்பிற்கு இரண்டு TATA ACE வாகனம், **19** B.O.V மூலம் திடக்கழிவுகள் சேகரிக்கப்படுகின்றன. நகரிலுள்ள குப்பைகளை முறைப்படி சீராக தினமும் மேற்கண்ட வண்டிகள் மூலம் அகற்றப்பட்டு உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டு வருகின்றன. நகரின் மொத்தமுள்ள **24** வார்டுகளில் குப்பைகளை பிளாஸ்டிக் கூடைகளில் சேகரம் செய்து வீடுகளில் வைக்கப்பட்டுள்ளதை தினமும் வண்டிகளில் வாங்கப்பட்டு அப்புறப்படுத்தும் முறையினை செயல்படுத்தப்பட்டு வரப்படுகிறது. இந்நகரில் பாதாள சாக்கடை உள்ள பகுதி நீங்கலாக உள்ள பிற பகுதிகளிலுள்ள கழிவுநீர் கால்வாய்கள் துப்புரவுப் பணியாளர்கள் மூலம் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது.

அறிக்கை ஆண்டில் அனைத்து துப்புரவு பணியாளர்களுக்கும் தலா ஒரு ஜோடி காலணிகள், ஆண்களுக்கு இரண்டு ஜோடி அரைக்கால் டவுசர், சட்டை மற்றும் தலைப்பாகை துணியும், பெண்களுக்கு இரண்டு ஜோடி சேலைகள், இரண்டு ரவிக்கைத் துணிகள் மற்றும் தலைப்பாகை விநியோகம் செய்யப்பட்டுள்ளது. அவற்றினை தைப்பதற்கான கூலியும் வழங்கப்பட்டுள்ளது. துப்புரவுப் பணியாளர்களுக்கு மாதம் ஒருமுறை சோப்பும், விநியோகிக்கப்படுகிறது. மேலும் துப்புரவு பணியாளர்களுக்கு துப்புரவு பணி பாதுகாப்புடன் மேற்கொள்ள பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்படுகிறது. கோவிட்**–19** பாதுகாப்பு உபகரணங்களுக்கு முகக்கவசம், கையுறை, சானிடைசர் மற்றும் PPE Kit வழங்கப்பட்டு வருகிறது.

**<u>திடக்கழிவு மேலாண்மை மற்றும் கையாளுதல்:</u>**

நகராட்சி மக்கள் தொகை **31688. 24** வார்டுகள் உள்ளது. நகரத்தெருக்களில் வீடுவீடாகச் சென்று நகராட்சி துப்புரவு பணியாளர்கள் குப்பைகளைப் பெற்று தள்ளுவண்டி மற்றும் BOV வாகனம் மூலம் சேகரிக்கப்படுகிறது. இதனால் பொது வீதிகளில் குப்பைகள் கொட்டுவதை தவிர்க்கப்படுகிறது. குப்பை பிரித்தெடுக்கும் பணி **22.12.2001** முதல் அமுல்படுத்தப்பட்டது. தற்போது குப்பை பிரித்தெடுக்கும் பணி **24** வார்டுகளிலும் கடைபிடிக்கப்பட்டுள்ளது. நகரில் **10.4** மெ.டன் குப்பைகள் சேகரிக்கப்பட்டு நகராட்சி உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்படுகிறது. அதில் தினசரி **6.3**டன் உரம்தயாரிக்கும் பணி MCC மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுநாள் வரை MCC மூலம் இயற்கை உரம் தயார் செய்து விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. சிமெண்ட் ஆலைகளுக்கு **13.2** டன் பிளாஸ்டிக் கழிவுகள் அனுப்பப்பட்டுள்ளது.

## சத்துணவு மையம்:

இந்நகராட்சி நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வந்த 9 குழந்தைகள் பாலர் பள்ளி சத்துணவு மையங்களை அரசு ஆணை எண்.17 சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை நாள். 30–12–2003 ன் படி அங்கன்வாடி மையங்களாக மாற்றம் செய்யப்பட்டு, 2+4 சத்துணவு திட்ட குழந்தைகள் நல அமைப்பாளர் மற்றும் உதவியாளர்களை இந்நகராட்சிக் கட்டுப்பாட்டிலிருந்து 24–03–2004 முற்பகல் முதல் குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது. மேலும் இப்பணிகளைப் பார்க்க அனுமதித்த உதவியாளர் மற்றும் கணக்கர் பணியிடமும் எடுக்கப்பட்டுவிட்டது.

தற்சமயம் இந்நகராட்சி நிர்வாகத்தின் கீழ் 2 பள்ளி சத்துணவு மையங்கள் செயல்பட்டு வருகிறது. அவைகளில் பணிபுரியும் பணியாளர்களின் விபரம் வருமாறு.

| | |
|---|---|
| 1) உதவியாளர் மற்றும் கணக்கர் பணியிடம் | ஒன்று |
| 2) சத்துணவு அமைப்பாளர்கள் பணியிடம் | இரண்டு (தற்சமயம் ஒரு பணியிடம் காலியாக உள்ளது) |
| 3) சத்துணவு சமையலர் பணியிடம் | இரண்டு |
| 4) சத்துணவு சமையலர் உதவியாளர் பணியிடம் | இரண்டு (ஒரு பணியிடம் காலியாக உள்ளது) |

2 பள்ளி சத்துணவு மையங்களில் 334 மாணவ, மாணவியர்களுக்கு சத்துணவு அளிக்கப்பட்டு வருகிறது.

## அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான தொழில்கள்:

நகரில் உள்ள எல்லா அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கும் உரிமையாணை வழங்கப்பட்டுள்ளது. அறிக்கை ஆண்டில் இந்தத் தலைப்பின் கீழ் உரிமத் தொகையாக ரூ. 2,31,000/– கிடைத்துள்ளது. உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளது. 01–04–2011 ஆம் தேதி முதல் தொழில் உரிமக்கட்டணம் உயர்வு செய்யப்பட்டு திருத்திய கட்டண விகிதம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

## சந்தைகளும், விழாக்களும்:

இந்நகரில் அறிவிக்கப்பட்ட விழாவோ, சந்தையோ எதுவும் கிடையாது. வழக்கம் போல் இந்த வருடம் ஏப்ரல், மே மற்றும் ஜீன் மாதங்களில் மாரியம்மன், பத்திரகாளியம்மன் கோவில் விழா மற்றும் பெருமாள்கோவில் தேர்த்திருவிழாவும் நடைபெற்றது. மேற்படி விழாவைக் காண அருகில் உள்ள கிராமங்களின் மக்கள் பெருந்திரளாக கூடிச் சென்றுள்ளார்கள். திருவிழாக்காலங்களில் சிறப்பு சுகாதார வசதிகள் செய்யப்பட்டது யாத்ரிகர்களுக்கு வரி எதுவும் விதிக்கப்படவில்லை. இந்தத் திருவிழா காலங்களில் நகராட்சி சார்பில் சுகாதார வசதியும், குடிநீர் வசதியும், சிறப்பான முறையில் செய்து கொடுக்கப்பட்டன.

## குடிநீர் விநியோகம்:

சாத்தூர் நகரின் குடிநீர் ஆதாரங்கள்.

1. கழுகுமலை, கயத்தார், எட்டையாபுரம், கோவில்பட்டி மற்றும் சாத்தூர் கூட்டு குடிநீர்த்திட்டம்.
2. வைப்பாறு

**குடிநீர் திட்டம்:**

சிறப்புத் திட்டமாக சீவலப்பேரியிலிருந்து கழுகுமலை, கயத்தார், எட்டையாபுரம், கோவில்பட்டி மற்றும் சாத்தூர் கூட்டுக் குடிநீர் திட்டம் ஒன்று ரூ.11.18 கோடித் திட்ட மதிப்பீட்டில் அரசு ஆணை எண்.2(டி) எண்.17/எம்.ஏ.டபிள்யூ.எஸ் எண்.2(டபிள்யூ எஸ்.2), நாள்:13.03.2003 மற்றும் அரசு ஆணை எண்.30/எம்.ஏ.டபிள்யூ.எஸ் (டபிள்யூ.எஸ்.3), நாள்:05.05.2003ன் படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் சாத்தூர் நகராட்சிக்கு புதியதாக இரண்டு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் ஒன்று மன்னார்கோட்டை சாலையில் உள்ள வாழவந்தாள்புரத்திற்கு அருகில் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவும் மற்றொன்று வெள்ளக்கரை சாலையில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலக கட்டிடத்திற்கு பின்புறத்தில் 3 இலட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டி முடிக்கப்பட்டு உள்ளது.

தற்போது இத்திட்டப் பணியில் 350 எம்.எம்.விட்டமுள்ள PSC குழாய்கள் 27.50 கிலோ மீட்டர் நீளத்தில் குழாய்கள் பதித்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட திட்டப்பணி நவம்பர் 2006 இறுதியில் முடிக்கப்பட்டு இந்நகராட்சிக்கு சராசரியாக நாள் ஒன்றுக்கு 15.00 லட்சம் லிட்டரும், நாள் ஒன்றுக்கு 50 LPCD குடிநீர் சாத்தூர் நகர பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

சாத்தூர் நகராட்சிக்கு நிரந்தமாக குடிநீர் பற்றாக்குறையை தவிர்க்கும் பொருட்டு புதியதாக அருப்புக்கோட்டை, சாத்தூர் மற்றும் விருதுநகர் நகராட்சியை உள்ளடக்கிய தாமிரபரணி ஆற்றினை நீர் ஆதாரமாக கொண்டு ரூ.444.71 கோடி மதிப்பீட்டில் நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண்.147 நாள்:13.11.2019–ல் அதற்கான நிதி ஒதுக்கீடு செய்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 3 சிப்பங்களாக பிரிவினை செய்து பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் சராசரியாக நாள் ஒன்றிற்கு 2.95 MLD வீதம் குடிநீர் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**வறட்சி நிவாரணத் திட்டம் – 2017–2018**

இந்நகராட்சிக்கு குடிநீர் விநியோகமானது தாமிரபரணி கூட்டுக்குடிநீர் திட்டத்தின் மூலமே விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. வறட்சி காலங்களில் போதுமான அளவு பொதுமக்களுக்கு தாமிரபரணி கூட்டுக்குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்க இயலாததால் 2017–18ம் ஆண்டிற்கு வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் உள்ளூர் குடிநீர் ஆதாரத்தினை மேம்படுத்தும் பொருட்டு இருக்கன்குடி அணைக்கட்டுப் பகுதியில் இருநீருறிஞ்சு கிணறுகள், பம்ப் மோட்டார் மற்றும் இருக்கன்குடி அணைக்கட்டு பகுதியில் இருந்து தலைமை நீரோற்று நிலையம் வரை நீருந்து குழாய்கள் அமைக்கும் பணியினை ரூ.300.00 லட்சம் மதிப்பீட்டில் செய்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி அளித்து உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்பொருட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு 17.12.2018ல் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் கோடைகாலம் தவிர்த்து நாளொன்றுக்கு சுமார் 10 லட்சம் லிட்டர் வீதம் குடிநீர் எடுப்பதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டும் வருகிறது.

**பாதாளச் சாக்கடை:**

சாத்தூர் நகரில் பாதாளச்சாக்கடை திட்டமானது 1968ம் ஆண்டு முதல் நகரில் 17 வார்டுகளில் மட்டும் பாதாளச் சாக்கடை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் நீளம் 11.386 கி.மீ. ஆகும். அறிக்கை ஆண்டில் மொத்தம் 2178 இணைப்புகள் உள்ளன. தற்போது செயல்பாட்டில் உள்ள பாதாளச் சாக்கடை திட்டமானது சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு செயல்படுத்தப்பட்டது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் இந்நகரில் விடுபட்ட பகுதிகளுடன் நகர் பகுதி முழுவதும் புதிய பாதாள சாக்கடை திட்டத்தினை ரூ.3766.35 லட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த அரசாணை எண்.24, நாள்:27.01.2014ல் உத்திரவிடப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு MS.Aqua Designs India Pvt. Ltd., Chennai அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட ஒப்பந்தக்காரரால் பணியினை மிகவும் கால தாமதமாக செய்யப்பட்டு வந்ததால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் வழங்கப்பட்ட பணி உத்திரவினை ரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 20.08.2019–ல் 2 ஆண்டுகள் காலவரை நிர்ணயம் செய்து M/s.Suthakara Infratech Pvt. Ltd., நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் அரசாணை எண்.218, நாள்: 25.05.2018–ல் திருத்திய நிர்வாக அனுமதியாக ரூ.4838.54 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2016–17ம் ஆண்டிற்கு சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் இருந்து பாதாளச்சாக்கடை அடைப்புகள் மற்றும் சுத்தம் செய்யும் பணிக்கு புதியதாக ரூ.15.00 லட்சம் மதிப்பீட்டில் ஜெட்ராடு இயந்திரம் பொருத்திய டாடா ஏ.சி. வாகனம் வாங்கப்பட்டு பாதாள சாக்கடை பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

2018–2019ம் ஆண்டிற்கு தூய்மை இந்தியா திட்டத்தின் (7th SHPC) கீழ் பாதாள சாக்கடை பணிக்கு 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஜெட்டிங் மிஷின் வாகனம் மற்றும் 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஜெட்டிங் மிஷின் வாகனம் வாங்குவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.26788/2018/பி3, நாள்: 29.10.2018ல் நிர்வாக அனுமதி அளித்து அதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிதியாண்டில் 1000 லிட்டர் மற்றும் 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஜெட்டிங் மிஷின் வாகனம் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**பாதுகாப்பு:**

இந்நகராட்சியின் பெருமுயற்சியாலும், பொதுமக்களின் ஒத்துழைப்பாலும் 26–03–1982ல் அரசினரால் தீயணைப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

**பலன்தரும் இனங்கள்:**

2022–2023ம் ஆண்டில் குத்தகை மூலம் நகராட்சிக்கு கீழ்குறிப்பிட்டவாறு வருமானம் கிடைத்துள்ளது.

| வ.எண் | குத்தகை இனம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | தினசரி சந்தை, இறைச்சி சந்தை, வார ஆட்டுச்சந்தை மற்றும் மீன்சந்தை. | 75000 |
| 2 | பேருந்து நிலைய பஸ் கட்டணம் | 505000 |
| 3 | பேருந்து நிலைய கடைகள் மற்றும் சிவன் கோவில் கடைகள் | 6903797 |
| 4 | பேருந்து நிலைய கட்டணக் கழிப்பிடம் | 630000 |
| 5 | பெட்டிக்கடைகள் | 975407 |
| 6 | ஆடு அடிக்கும் இடம் | 215000 |
| 7 | வடக்கு ரத வீதி கட்டணக் கழிப்பிடம் | 170000 |
| 8 | காமராஜபுரம் வணிக வளாக கடைகள் | 0 |
| 9 | சிவன் கோவில் வடக்கு ரத வீதி கடைகள் | 0 |

<u>போக்குவரத்து :</u>

நகராட்சி எல்கைக்குள் ஒரு புகை வண்டி நிலையம் உள்ளது. நகராட்சி பேருந்து நிலையம், புகைவண்டி நிலையத்திற்கு அருகிலேயே அமைந்துள்ளது. இந்நகரிலிருந்து பேருந்துகள் மதுரை, இராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், அருப்புக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, நாகர்கோவில், குளச்சல், கன்னியாகுமரி, திருவனந்தபுரம் முதலிய இடங்களுக்குச் செல்கின்றன. நாகர்கோவிலில் இருந்து புறப்பட்டு சென்னை, கோயம்புத்தூர், சேலம், வேலூரார் முதலிய இடங்களுக்குச் செல்லும் அரசு நிறுவன பேருந்துகள் இந்நகரின் வழியே செல்கின்றது. நகர்ப்புற பேருந்துகள் இந்நகராட்சிப் பகுதியிலிருந்து மற்ற இடங்களுக்கு செல்கின்றது. இந்நகராட்சி பேருந்து நிலையம் விருதுநகர் மண்டல போக்குவரத்து அதிகாரி அவர்களின் 23.03.1990–ம் தேதி ஆர்.எண். 5612/ஆர்3/88 எண் செயல்முறை ஆணைப்படி (சி) வகுப்பு பஸ் நிலையமாக உயர்த்தப்பட்டு பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு 10.03.2002 வரை நாள் ஒன்றுக்கு ரூ.2 வீதம் வசூல் செய்யப்பட்டு அரசாணை எண். 175 நாள்.04.03.2002–ன் படி 11.03.2002 முதல் நாள் ஒன்றுக்கு ரூ.8/– வீதம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில் பேருந்து கட்டணம் துறை மூலம் வசூல் செய்யப்பட்டதில் ரூ. 4,89,600/– வருமானம் கிடைத்துள்ளது.

## சந்தைகள்:

இந்நகராட்சியிலிருந்து வாரம் ஒருமுறை கூடும் ஆட்டுச்சந்தை, தினசரி காய்கறி சந்தை, இறைச்சி மற்றும் மீன் சந்தை ஆகிய 4 சந்தைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இந்நகராட்சி தினசரி காய்கறி மார்க்கெட் இடித்துவிட்டு புதியதாக மார்க்கெட் கட்டுவதற்கு வழங்கப்பட்ட தொகை ரூ. 6.00 இலட்சத்தில் ரூ.5,02,822/– செலவில் கட்டி முடிக்கப்பட்டது. இந்த தினசரி காய்கறி சந்தையின் உட்புறத்தில் உள்ள 25 கடைகளை பழைய கடைக்காரர்களுக்கே தினசரி வாடகை அடிப்படையில் 15.03.1990 முதல் ஒப்படைக்கப்பட்டது. தினசரி வாடகை அடிப்படையில் நாள் 1க்கு வாடகை ரூ.16/– வீதம் 16 கடைகளும் நாள் 1க்கு ரூ.21/– வீதம் 6 கடைகளும், ரூ.23/– வீதம் 3 கடைகளும் அடங்கும். இவைபோக தினசரி சந்தையின் வெளிப்புறத்தில் (7) ஏழு கடைகள் கட்டப்பட்டு இந்த (7) ஏழு கடைகளும் பகிரங்க பொது ஏலத்தில் விடப்பட்டு கூடுதல் ஏலக்கேள்விதாரர்களுக்கு 01.09.1990 முதல் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. தினசரி சந்தைக் கட்டுவதற்கு கொடுக்கப்பட்ட 6 இலட்சம் தொகையில் செலவான தொகை ரூ.5,02,822/– போக மீதமுள்ள தொகை ரூ. 97,178/–ஐ உபயோகித்து ஆர்.சி. வடக்குத் தெருவில் இறைச்சி கடைகளுக்கு எதிர்புறத்தில் நகராட்சிக்குப் பாத்தியப்பட்ட காலியிடத்தில் 4 கடைகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. இந்த நான்கு கடைக்கும் பொது ஏலத்தில் விடப்பட்டு குத்தகை தொகை வசூல் செய்யப்பட்டு வருகிறது. தினசரி சந்தை, இறைச்சி சந்தை, ஆட்டுச்சந்தை மற்றும் மீன்சந்தை கடைகளை குத்தகைக்கு விட்டதன்பேரில் 2022–2023ம் ஆண்டுக்கு இந்நகராட்சிக்கு ரூ. 3,99,816/– வருமானம் கிடைத்துள்ளது.

## வண்டிப்பேட்டை:

இந்நகராட்சியால் வண்டிப்பேட்டை எதுவும் பராமரிக்கப்படவில்லை.

## பேருந்து நிலையம்:

ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ .7,85,427/– செலவில் பேருந்து நிலைய அபிவிருத்தி பணி வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 1990–ம் ஆண்டில் செய்து முடிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் பேருந்து நிலையத்தில் பேருந்துகள் நிற்குமிடம் வடக்குப் பக்கம், தெற்குப் பக்கம் மற்றும் கிழக்குப் பக்கம் கட்டப்பட்டிருக்கிறது. இந்த 15 கடைகளும் பொது ஏலத்தில் விடப்பட்டு கூடுதல் ஏலக்கேள்விதாரர்களுக்கு இந்நகர்மன்றத்தின் 11.10.89–ம் தேதிய எண்.804 தீர்மானத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டு 11.12.89 முதல் ஒப்படைக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட ரூ. 8.20 லட்சத்தில் செலவாகிய தொகை ரூ.7,85,427/– போக மீதமுள்ள தொகை ரூ. 34,573/– ஐ நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு திரும்ப செலுத்தப்பட்டுவிட்டது. மேலும் பேருந்து நிலையத்தில் பதினொன்றாவது நிதிக்குழுவின் திட்டத்தின் கீழ் ரூ.20.00 லட்சம் மற்றும் நகராட்சி நிதியிலிருந்து ரூ. 2.00லட்சம் ஆக மொத்தம் ரூ. 22.00 லட்சம் மதிப்பீட்டில் சிமிண்ட் ஒடு தளம் அமைக்கும் பணியும் முடிக்கப்பட்டுள்ளது. பேருந்து நிலையத்தில் உள்ள கடைகள் மற்றும் இதர இனங்களின் கீழ் (வெள்ளரிக்காய், டி.வி) 2022–2023ம் ஆண்டுக்கு இந்நகராட்சிக்கு ரூ. 9,00,795/– வருமானம் கிடைத்துள்ளது.

**<u>கட்டணக் கழிப்பிடம்:</u>**

இந்நகராட்சியில் ரயில்வே பீடர் ரோடும் வடக்குவரதவீதியும் சந்திக்கும் இடத்தில் கட்டண கழிப்பிடம் அமைக்க ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு ரூ.1.00 லட்சம் இந்நகராட்சிக்கு கடனாக அனுமதிக்கப்பட்டது. இந்தக் கட்டண கழிப்பிடம் கட்டி முடிக்கப்பட்டு 01.09.1991 முதல் பொதுமக்களின் உபயோகத்திற்கு கொண்டு வரப்பட்டது. மேலும் பேருந்து நிலைய கட்டணக் கழிப்பறை பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

**<u>இதர பெட்டிக் கடைகள் :</u>**

சாலை ஓரங்களில் உள்ள நகராட்சி பெட்டிக் கடைகளின் கீழ் இந்நகராட்சிக்கு அறிக்கை ஆண்டில் ரூ. 62.35 லட்சம் வருமானம் கிடைத்துள்ளது.

**<u>சைக்கிள் நிலையம்:</u>**

நகராட்சி பேரூந்து நிலையம் அருகில், சைக்கிள் நிலையம் ஒன்று நகராட்சியால் அமைக்கப் பட்டுள்ளது. 2022–2023ம் ஆண்டிற்கு ஏலம் விட்டதில் நகராட்சிக்கு ரூ.2.76 லட்சம் வருமானம் கிடைத்துள்ளது.

**<u>ஆடு அடிக்கும் இடம்:</u>**

2022–2023 ஆண்டில் ஆடு அடிக்கும் இடத்தினை குத்தகைக்கு விடப்பட்டதில் ரூ.2,15 லட்சம் வருமானம் கிடைத்துள்ளது.

**<u>தொழிற்சாலைகளும், தொழில்களும் :</u>**

இந்நகர் தொழிற்சாலை மிகுந்த பெரிய நகரம் இல்லை. இங்கு சிறிய அளவிலான தீப்பெட்டி தொழிற்சாலைகளும், நிப்புத் தொழிற்சாலைகளும் மட்டுமே அதிகமாக உள்ளது.

**<u>மரம் நடுதல் மற்றும் பூங்காக்கள்:</u>**

சாத்தூர் மெயின்ரோட்டிலுள்ள நகராட்சி குடிநீர்த்தேக்க நிலையத்திலுள்ள ஒரு சிறிய பூங்காவும், நீரேற்று நிலையத்திலுள்ள ஒரு சிறிய பூங்காவும் மற்றும் கோ–ஆப்ரேட்டிவ் சொசைட்டி காலனி பூங்காவும் நகராட்சியின் பராமரிப்பில் இருந்து வருகிறது.

**<u>நகரமைப்பு:</u>**

சாத்தூர் நகராட்சிப் பகுதியை தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 10(1) ன் படி அரசு தனது 20.09.1973–ம் தேதிய ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் 2003–ம் எண் அரசாணையில் உள்ளூர் திட்டக் குழும பகுதியாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. மேற்படி சட்டம் பிரிவு 10(எ)ன் படி அரசு தனது 16.03.1974–ம் தேதிய ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் 628ன் எண் அரசாணையில் உறுதி செய்யப்பட்டுள்ளது. சாத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் தனித்த உள்ளூர் திட்டக் குழுமம் ஆகும். (Single Local Planning Authority) இதன் மொத்தம் பரப்பளவு 3.83 சதுர கிலோ மீட்டர் ஆகும்.

சாத்தூர் உள்ளூர் திட்டக் குழுமத்திற்கு முழுமைத் திட்டம் (Master Plan) அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் இந்நகருக்கு கீழேகண்ட ஐந்து விரிவு அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

1. விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்.1
2. விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்.2
3. விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்.3
4. விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்.4
5. விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்.5

## முழுமைத் திட்டம் புதுநிலைப்படுத்துதல்:

சாத்தூர் உள்ளூர் திட்டக் குழுமப் பகுதிக்கு முழுமைத் திட்டம்–புதுநிலைப்படுத்துதல் சம்பந்தமாக மதுரை, நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் 23.02.1996–ம் தேதிய ந.க.3486/95/மம2 எண் கடிதத்தின்படி நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 32(2) (பி) ன் கீழ் முழுமைத் திட்டத்தினை மறுஆய்வு செய்து அரசுக்கு 01.03.1996–ம் தேதி சமர்ப்பிக்கப்பட்டது. இதன் பேரில் அரசாணை எண். 205 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள். 05.06.1997–ல் இணக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அதன் பேரில் அரசிதழ் மற்றும் நாளிதழில் பிரசுரம் செய்ய தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு பின்னர் மேற்படி திட்டமானது (கோப்பு எண்.807/96/எப்1) அரசு ஆணை எண்.205 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.5.6.97 வரைவு நிலை அடைந்தது. இதனைத் தொடர்ந்து மறு ஆய்வு முழுமைத் திட்டம் அரசு ஆணை எண்.328 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள். 24.07.2001–ல் அங்கீகாரம் அளிக்கப்பட்டது என நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் கடித எண்.17971/2001/மு.தி.2 நாள். 31.12.2001–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்சமயம் நகரில் உள்ள நிலஉபயோக வளர்ச்சி மறு ஆய்வு முழுமைத் திட்டத்தின் படி செயல்பட்டு வருகிறது.

## விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் – 1

இதன் பரப்பளவு 74.88 ஏக்கர் (29.35.5 ஹெக்டேர்) ஆகும். இத்திட்டம் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் 16.02.1996–ம் தேதிய செயலாணைக் கடிதம் எண்.9458/95/எப்1ல் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வலுவலக ந.க.எண்.274/94/எப்1 எண் கோப்பில் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. திட்டத்தின் வளர்ச்சிக்கேற்ப திட்ட ஒதுக்கீடுகளை மாற்றி அமைக்கும் பொருட்டு துணை நகர் ஊரமைப்பு மண்டல அலுவலக தொழில்நுட்ப பிரிவால் திட்டப் பகுதிகள் யாவும் மறு ஆய்வு செய்யப்பட்டு தற்போது நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 33(1)ன் கீழ் ஒருங்கிணைந்த வரைவு திட்ட மாற்றம் ஒப்புதல் நடைபெற்று வருகிறது.

## விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் – 2

இதன் பரப்பளவு 125.44 ஏக்கர் (50.76.5 ஹெக்டேர்) ஆகும். இத்திட்டம் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 13108/93/டிபி2 நாள்.12.01.1994–ன் படி அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வலுவலக ந.க.எண்.274./94/எப்1 எண் கோப்பில் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. திட்டத்தின் வளர்ச்சிக்கேற்ப திட்ட ஒதுக்கீடுகளை மாற்றி அமைக்கும் பொருட்டு துணை நகர் ஊரமைப்பு மண்டல அலுவலக தொழில்நுட்ப பிரிவில் திட்டப்பகுதிகள் யாவும் மறுஆய்வு செய்யப்பட்டு உரிய திருத்திய வரைபடம் மற்றும் ஷெட்யூல்கள் தயாரிக்கப்பட்டு வருகிறது.

## விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் – 3

இதன் பரப்பளவு 47.3 ஏக்கர் (19.14.0 ஹெக்டேர்) ஆகும். இத்திட்டம் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் செயலாணைக் கடிதம் ந.க.எண்.57305/91/டிபி2 நாள்.14.07.1993–ன் படி அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் பெரும்பாலும் திட்டநில உபயோகத்தின்படியே வளர்ச்சி அடைந்து வருகிறது. The plan thus varied is numbered as Map No.5, DDP (V) CTC) No.20/2008. (Roc.No.1198/2008/F1)

## விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் – 4

இதன் பரப்பளவு 120.00 ஏக்கர் (48.56.5 ஹெக்டேர்) ஆகும். இத்திட்டம் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் செயலாணைக் கடிதம் ந.க.எண்.891/92/டிபி2 நாள். 08.12.1993–ன் படி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் பெரும்பாலும் திட்ட நில உபயோகத்தின்படியே வளர்ச்சி அடைந்து வருகிறது. தற்போது நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 33(1)ன் கீழ் ஒருங்கிணைந்த வரைவு திட்ட மாற்றம் ஒப்புதல் நடைபெற்று வருகிறது.

## விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் – 5

இதன் பரப்பளவு 130.00 ஏக்கர் (52.61.0 ஹெக்டேர்) ஆகும். இத்திட்டம் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் செயலாணைக் கடிதம் ந.க.எண்.891/92/டிபி2 நாள். 08.12.1993–ன் படி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் பெரும்பாலும் திட்ட நில உபயோகத்தின்படியே வளர்ச்சி அடைந்து வருகிறது.

## பொது:–

### 1) நகரமைப்புப் பிரிவு பணியாளர்களின் விபரம்:

இந்நகராட்சியின் நகரமைப்புப் பிரிவில் ஒரு நகரமைப்பு ஆய்வாளர், ஒரு சங்கிலியாளரும் பணிபுரிந்து வருகின்றார்கள்.

### 2. கட்டிட மனுக்கள்:

நடப்பு ஆண்டில் மேற்படி கட்டிட மனுக்களுக்கு உரிமையாணைக் கட்டணமாக ரூ. 2,92,062/– வசூல் செய்யப்பட்டுள்ளது. மேலும் கட்டிட மனுக்களுக்கு அபிவிருத்திக் கட்டணமாக ரூ. 68,050/– வசூல் செய்யப்பட்டுள்ளது. நகராட்சி நடைமுறையில் உள்ள கட்டண விகிதங்கள் தமிழக அரசு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் கடிதம் எண்ந.க.ஜி1/11102/2019, நாள்: 28.08.2019ன்படியும், இந்நகர்மன்றத் தீர்மான எண்.407, நாள்: 28.03.2019–ன்படியும், 01.04.2019 முதல் திருத்திய கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

**01.04.2022 முதல் 31.03.2023**

| | | |
|---|---|---|
| நடப்பு ஆண்டில் வரப்பெற்ற கட்டிட விண்ணப்பங்கள் | .. | 60 |
| உரிமையாணை வழங்கப்பட்டவை | .. | 60 |
| அனுமதி மறுத்து/ திருப்பி அனுப்பப்பட்டவை | .. | 0 |

### 1) ஆக்கிரமிப்புகள்:

நடப்பு ஆண்டில் நிரந்தர ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லை. சாலை ஓரங்களில் கண்டறியப்படும் தற்காலிக ஆக்கிரமிப்புகள் அவ்வப்போது அகற்றப்பட்டு வருகிறது.

<u>பொது வருவாய்</u>

<u>வருவாய் கணக்கு</u>

சென்ற ஆண்டை போலவே அறிக்கை ஆண்டிலும் கீழே கண்ட விகிதங்களின்படி சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது.

| வீட்டு வரி | ஆண்டு வாடகை மதிப்பில் அரையாண்டு வரி |
|---|---|
| பொதுக்காரியங்களுக்கு | 5.5 சதவீதம் |
| தண்ணீர் மற்றும் சாக்கடை வரி | 4 சதவீதம் |
| துப்புரவு வரி | 1 சதவீதம் |
| விளக்கு வரி | 2 சதவீதம் |
| கல்வி வரி | 2 5 சதவீதம் |
| **ஆக மொத்தம்** | **15 சதவீதம்** |

இந்நகர்மன்றம் தனது 28.02.1991–ம் தேதிய 195 எண் தீர்மானத்தில் பொதுக்காரியங்களுக்கான அரையாண்டு வரிவிகிதம் 4 சதவிகிதம் என்று இருப்பதை 5 1/2 சதவிகிதம் ஆக 01.04.1991 முதல் உயர்த்தி விதிக்க உறுதி செய்யப்பட்டிருக்கிறது. அதன்படி இந்த கூடுதல் வரிவிகிதம் 01.04.1991 முதல் அமுலுக்கு கொண்டு வரப்பட்டு வரி உயர்வு செய்யப்பட்டு இருக்கிறது.

<u>காலி நிலங்கள்:</u>

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 81(3)ன் கீழ்

| | | |
|---|---|---|
| 1. பொதுக் காரியங்களுக்கு | 2% | அரையாண்டு நிலத்தின் மூலமதிப்பில் |
| 2. தண்ணீர் மற்றும் சாக்கடை வரி | 4% | அரையாண்டு நிலத்தின் மூலமதிப்பில் |
| 3. துப்புரவு வரி | 1% | அரையாண்டு நிலத்தின் மூலமதிப்பில் |
| 4. விளக்கு வரி | 1% | அரையாண்டு நிலத்தின் மூலமதிப்பில் |

<u>தொழில்வரி:</u>

1920ம் வருட திருத்தப்பட்ட மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 124(D) (2)-ன்படி இந்நகராட்சி பகுதியில் தொழில் செய்பவர்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனம் மத்திய மாநில அரசு உள்ளாட்சி பணியாளர்களுக்கு தொழில் வரி விதிக்கப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட தொழில்வரியானது 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை 25% முதல் 35% வரை உயர்த்தப்பட வேண்டுமென மேற்படி சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. அதன்படி 01.10.2008 முதல் கீழ்கண்ட விபரப்படி நிர்ணயம் செய்யப்பட்ட தொழில்வரி தொகையினை 01.10.2013 முதல் குறைந்தது 35%மாக வசூல் செய்ய இந்நகர்மன்றத் தீர்மான எண்.356, நாள்:22.11.2013ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி 01.10.2013 முதல் கீழ்க்காணும் விவரப்படி திருத்திய கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

| வ. எண். | அரையாண்டு வருமானம் | 01.10.2013 முதல் அரையாண்டு தொழில்வரி ரூ. | 01.10.2019 முதல் அமுலுக்கு வரும் அரையாண்டு தொழில்வரி (ரூ) |
|---|---|---|---|
| 1. | ரூ. 21000/– வரை | வரி இல்லை. | ––– |
| 2. | ரூ. 21001/– முதல் 30000 வரை | 130 | 180 |
| 3. | ரூ. 30001/– முதல் 45000 வரை | 325 | 440 |
| 4. | ரூ. 45001/– முதல் 60000 வரை | 635 | 860 |
| 5. | ரூ. 60001/– முதல் 75000 வரை | 955 | 1250 |
| 6. | ரூ. 75001/– முதல் அதற்கு மேலும் | 1250 | 1250 |

2022–2023 ஆம் ஆண்டில் தொழில்வரி ரூ. 2965788/– வசூலிக்கப்பட்டுள்ளது.

**<u>நிலுவையில் உள்ள வழக்குகள் விவரம்:</u>**

இந்நகராட்சியில் 31–03–2016ல் மொத்தம் 21 வழக்குகள் நிலுவையாக உள்ளன. விவரம் வருமாறு:

| பிரிவு | மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் | சார்பு நீதிமன்றம் | உயர்நீதி மன்றம் | தீர்ப்பாயகம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| வருவாய் பிரிவு | 7 | 2 | 2 | –– | 11 |
| குத்தகை | –– | –– | 2 | –– | 2 |
| பொறியியல் பிரிவு | –– | –– | 2 | –– | 2 |
| நகரமைப்பு பிரிவு | 1 | –– | 4 | –– | 5 |
| சுகாதாரப்பிரிவு | –– | –– | –– | –– | –– |
| பொதுப்பிரிவு | –– | –– | –– | –– | –– |
| மொத்தம் | 8 | 2 | 9 | –– | 19 |

**பொது வருமானம்:**

நகராட்சி பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு ஊதியம் வழங்கிட மாநில நிதிக்குழு மானியமாக ரூ. 42175630/– இந்நகராட்சிக்கு நிதிஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் கீழ்க்காணும் விவரப்படி ரூ.28664918/– பிடித்தம் செய்யப்பட்டு, மீதம் ரூ.13510312/– மட்டும் இந்நகராட்சிக்கு மான்யமாக வரப்பட்டது.

| | | |
|---|---|---|
| பென்சன் | = | 19262039/– |
| டுபிட்கோ கடன் மற்றும் வட்டி | = | 8909586/– |
| TNUDF கடன் | = | 68601/– |
| Telephone Charges | = | –– |
| EB Charges | = | 300000/– |
| TWAD | = | –– |
| Pensioners NHIS | = | 24692/– |
| **மொத்தம்** | = | **28664918/–** |

**கடன்கள்:**

அறிக்கை ஆண்டில் கீழ்க்கண்டவாறு கடன் பாக்கி உள்ளது.

**அரசுக் கடன்**

| | வருவாய் நிதி | குடிநீர் விநியோகம் | டிஎன்யுடிபி எம்யூடிஎப் | ஐயுடிபி | டுபிட்கோ |
|---|---|---|---|---|---|
| நடப்பு ஆண்டின் ஆரம்பத்தில் உள்ள கடன் தொகை | –– | 39926700 | –– | 1081849 | 6013 |
| கடன் செலுத்தியது 2008–2009, 2009–2010 | –– | –– | –– | –– | –– |
| தள்ளுபடி செய்தது | –– | –– | –– | –– | –– |
| நடப்பு ஆண்டில் கடன் வாங்கப் பெற்றது | –– | 1700000 | –– | –– | –– |
| நடப்பு ஆண்டில் இறுதியில் உள்ள கடன் தொகை | –– | 41626700 | –– | 1081849 | 6013 |

**தணிக்கை:**

2021–2022ம் ஆண்டுக்கான தணிக்கை நடைபெற்று முடிந்துள்ளது. 2022–2023ம் ஆண்டு தணிக்கை நடைபெற்று வருகிறது. 2021–2022ம் ஆண்டு முடிய மொத்தம் 146 தணிக்கைத் தடைகள் உள்ளது. தணிக்கைத் தடைகளை நிவர்த்தி செய்யவும் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## மழைநீர் சேகரிப்பு அமைப்புகள்:

தமிழக அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறையின் 11.10.2002 மற்றும் 11.11.2002ம் தேதிய அரசாணை எம்.எஸ்.எண்.138 மற்றும் 168—ன் பிரகாரம், தமிழ்நாடு கட்டிட விதி 1972ல் மழைநீர் சேமிப்பை கட்டாயமாக்கி உத்திரவிடப்பட்டது.

மேற்படி உத்தரவின்படி நகரில் ஏற்கனவே உள்ள குடியிருப்பு கட்டிடங்கள், குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள், தொழிற்சாலைகள், அரசு கட்டிடங்கள், சாலைகள், ஆழ்துளைக் கிணறுகள், ஊரணிகள், குளங்கள் ஆகிய கட்டிடங்களிலும், புதியதாகக் கட்டப்படும் கட்டிடங்களிலும் கட்டாயம் மழைநீர் சேமிப்பு அமைப்பு அமைக்கக் கோரி விழிப்புணர்வு முகாம்கள், தெருமுனைப் பிரச்சாரம், நோட்டீஸ் வழங்குதல், கேபிள் டிவியில் விளம்பரம் செய்தல் ஆகிய மீடியாக்கள் மூலம் மழைநீர் சேமிப்பின் அவசியத்தை எடுத்துக் கூறியதின் அடிப்படையில் இந்நகரில் உள்ள அனைத்து கட்டிடங்களிலும் 100 சதவீதம் மழைநீர் சேமிப்பு ஏற்படுத்தவும், புனரமைப்பு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் மழைநீர் கட்டமைப்பு ஏற்படுத்தாத வணிக மற்றும் குடியிருப்பு கட்டிடங்களுக்கு ரூ.100/— வீதம் அபராதம் விதித்து வசூல் செய்யப்படுகிறது.

## பொது::

அறிக்கை ஆண்டில் நகராட்சி நிர்வாகம் செம்மையாகவும், சிறப்பாகவும் செயல்படுவதற்கு நகர்மன்றத்தலைவர், நகர்மன்றத் துணைத்தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள், அலுவலகப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களும் ஒத்துழைத்தார்கள். நிர்வாகம் சார்பில் அனைவருக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் மழைநீர் கட்டமைப்பு ஏற்படுத்தாத வணிகம் மற்றும் குடியிருப்பு கட்டிடங்களுக்கு ரூ.100/— வீதம் அபராதம் விதித்து வசூல் செய்யப்படுகிறது.

ஆணையாளர்
சாத்தூர் நகராட்சி.

இடம் : சாத்தூர் .

நாள் : 22.05.2023